## இனிமையான குழந்தைகளே! ஞானத்தின் ஒரு துளியாவது: தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு தந்தையை நினைவு செய்யுங்கள். இந்த ஒரு துளியின் மூலம் முக்தி, ஜீவன்முக்தி கிடைக்கக்கூடும்

கேள்வி: எந்த முயற்சியில் தனது மற்றும் பிறரது முன்னேற்றம் அடங்கியிருக்கின்றது?

பதில்: 1) நினைவில் இருப்பதற்கான முயற்சி செய்யுங்கள். இதில் தான் தனக்கும் மற்றும் பிறருக்கும் முன்னேற்றம் அடங்கியிருக்கின்றது. குழந்தைகளாகிய நீங்கள் நினைவில் அமரும் பொழுது மற்றவர்களுக்கு அமைதியை தானம் செய்கின்றீர்கள்.

2) தங்களுக்குள் தேகாபிமானத்திற்கான உலகீய விசயங்களை விட்டு விட்டு ஆன்மீக விசயங்கள் பேசும் பொழுது முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். நீங்கள் தந்தையை வெளிப்படுத்த வேண்டும். எந்த அளவிற்கு வெளிப்படுத்துகின்றீர்களோ, அனைவருக்கும் அமைதி மற்றும் சுகத்திற் கான வழியைக் காண்பிக்கின்றீர்களோ அந்த அளவிற்கு பரிசு கிடைக்கும்.

பாட்டு: நீ அன்புக் கடலாக இருக்கின்றாய் ........... ஓம் சாந்தி.

இவ்வாறு பக்தியில் பாடி வந்தனர். மகிமை செய்து வந்தனர். அது பரம்பிதா பரமாத்மாவின் மகிமையாகும். பக்தி மார்க்கத்தில் அநேக விதமான புகழ் பாடப்படுகின்றன, உற்சவங்களும் கொண்டாடுகின்றனர். அதுவும் புகழாகத் தான் இருக்கின்றது. எந்த மனிதர்களுக்கும் சாது, சந்நியாசிகளுக்கும் புகழ் ஏற்பட முடியாது. அவர் ஞானக் கடல் என்று பாடுகின்றனர். ஒரே ஒரு துளி கிடைத்து விட்டால் நாம் இங்கிருந்து சென்று விடுவோம். எங்கு செல்வோம்? முக்தி அல்லது ஜீவன்முக்தி தாமத்திற்கு. மகிமைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். ஆனால் அவரது மகிமையைப் புரிந்து கொள்ளவில்லை. நீங்களும் வரிசைக்கிரமமாக அறிந்திருக்கின்றீர்கள். இரண்டு தந்தையின் ரகசியமும் புரிய வைக்கப்பட்டிருக்கின்றது - ஒன்று லௌகீக தந்தை, அவரது நினைவு வருவதையே தேகாபிமானம் என்று கூறப்படுகின்றது. ஆத்மாவிற்கு தேகத்தைக் கொடுக்கக் கூடிய தந்தையின் நினைவு வருகின்றது. ஆத்மா தனது ஆன்மீகத் தந்தையை மறந்து விடுகின்றது. இது தான் தவறாகும். யாரும் மறந்து விட வில்லை. ஆனால் ஆத்மாவே பரமாத்மா என்று கூறி விடுகின்றனர். இதுவே தவறாகும். நாம் ஜீவாத்மாக்கள் என்றும் கூறுகின்றனர். எனது ஆத்மாவைத் தொந்தரவு செய்யாதீர்கள். ஆத்மாவிற்குத் தான் தொந்தரவு ஏற்படுகின்றதல்லவா! ஆத்மாவிற்கு கர்ப சிறையில் தண்டனை கிடைக்கின்றது எனில், அது சரீரத்தினால் துக்கம் அனுபவிக்கின்றது. ஸ்தூல ரூபத்தில் தான் சாட்சாத்காரமும் செய்விப்பார். அப்பொழுது தான் அது உணருகின்றது. எனக்கு துக்கம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. நான் ஆத்மா என்பதை முதலில் பயிற்சி செய்யுங்கள் என்று குழந்தைகள் புரிய வைக்கப்படுகின்றனர். தேகாபிமானம் வருவதன் மூலமாக சம்பந்தங்களின் நினைவு வருகின்றது - இவர் சித்தப்பா, இவர் மாமா...... சரீரம் இல்லையெனில் எந்த சம்பந்தமும் இல்லை. ஆத்மாவிற்கான ஞானமாகும். யாரையும் மகான் பரமாத்மா என்று கூறுவதில்லை. யாராவது இறந்து விட்டால் அவரது ஆத்மாவை அழைக்

கின்றனர். இன்னாரது பரமாத்மாவை அழைக்கின்றோம் என்று கூறுவதில்லை. எந்தச் சூழ்நிலை யிலும் அவரை பரமாத்மா என்று கூற முடியாது. பரமாத்மா பிறப்பு இறப்பில் வருவதும் இல்லை. பரமாத்மா பிறப்பு, இறப்பற்றவர். ஆத்மா மறுபிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கின்றது. முதன் முதலில் ஆத்மாவானது தேவி தேவதைகளாக இருந்தது என்றும் புரிய வைக்கப்படுகின்றது. 84 பிறப்புகள் பற்றி பாரதத்தில் தான் பாடப்படுகின்றது. இப்பொழுது ஞானக்கடல் எதிரில் அமர்ந்திருக் கின்றார் என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். பதீத பாவனனையே ஞானக் கடல் என்று கூறுவோம். ஞானேஷ்வர் என்று தந்தையை மட்டுமே கூறுகின்றோம். ஈஸ்வரனிடத்தில் உலகின் முதல், இடை, கடைக்கான ஞானம் இருக்கின்றது. ஈஸ்வரன் தான் உலகைப் படைக்கின்றார். ஆகையால் தான் அவரிடத்தில் படைப்பின் ஞானம் இருக்கின்றது. படைப்பவர் என்று கூறு கின்றோமெனில் கண்டிப்பாக படைக்கப்பட்ட உலகம் இருக்கின்றது. ஆகையால் தான் கூறு கின்றோம். படைப்பவரை தந்தை என்று கூறுகின்றோம். சகோதரன், சகோதரியை படைப்பவர் என்று கூறுவதில்லை. படைப்பவர் எப்பொழுதும் தந்தை என்றே கூறப்படுகின்றார். நமது எதிரில் தந்தை அமர்ந்திருக்கின்றார் என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். அயல்நாடுகளிலும் சிலர் அமர்ந்திருக்கலாம், தந்தையிடமிருந்து நாம் தூரயிருக்கின்றோம் என்று அவர்கள் கூறுவர். ஆனால் நினைவு செய்வார்களல்லவா! நீங்களும் நினைவு செய்ய வேண்டும். ஆனால் லௌகீக சம்பந்தங்களைப் பார்த்து பரலௌகீக தந்தையை மறந்து விடுகின்றனர். ஆகையால் தந்தை கூறுகின்றார் - எழுந்தாலும், அமர்ந்தாலும் தந்தையை நினைவு செய்யும் பயிற்சி செய்யுங்கள். நான் ஆத்மா, இந்த சரீரத்தின் மூலம் நடக்கின்றேன். ஆத்மாவின் ஞானம் உங்களிடத்தில் இருக் கின்றது. ஆத்மா பரமாத்மாவைப் பிரிந்து வெகு காலம் ஆகி விட்டது என்பதையும் அறிந்திருக் கின்றீர்கள். பரமாத்மாக்கள் பரமாத்மாவைப் பிரிந்து வெகு காலம் ஆகி விட்டது என்று கூறுவதில்லை. ஆத்மா மற்றும் பரமாத்மா என்று கூறப்படுகின்றது.

இப்பொழுது தந்தை குழந்தைகளின் எதிரில் அமர்ந்திருக்கின்றார். உங்களது ஒரு துளியும் கூட மிகவும் உயர்ந்ததாகும் என்று கூறுகின்றீர்கள். பரம்பிதா பரமாத்மா ஆத்மாக்களாகிய நமக்கு தந்தையாக இருக்கின்றார். அவ்வளவு தான், இதையே ஞானம் என்று கூறப்படுகின்றது. அனைத்து ஆத்மாக்களாகிய உங்களுக்கு நான் தந்தையாக இருக்கின்றேன், என்னையே பதீத பாவன், ஞானக் கடல் என்று கூறுகின்றீர்கள் என்று வேறு யாரும் கூறுவதற்கு தைரியம் கிடையாது. இவ்வாறு கூறுவதற்கு யாருக்கும் வரவும் வராது. தந்தை மட்டுமே கூறுகின்றார் - நான் உங்களது தந்தையாக இருக்கின்றேன். இப்பொழுது மகாபாரத யுத்தமானது எதிரில் இருக் கின்றது. யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களும் இருக்கின்றனர். இவையனைத்தையும் புரிய வைப்பதில் தான் இருக்கின்றது. ஆசிரியர் புரிய வைக்காத வரைக்கும் சித்திரங்களைப் பார்த்து புரிந்து கொள்வது கடினமாகும். பள்ளியிலும் ஆசிரியர் புரிய வைக்கின்றார் அல்லவா - இது இந்தியா, இது லண்டன். புரிய வைக்காமல் புத்தியில் வர முடியாது. ஒரு வேளை வரைபடத்தில் பெயர் களை படித்தாலும் பெயரை மட்டுமே கூற முடியும். ஆனால் எங்கு இருக்கின்றது? யார் ராஜ்ஜியம் செய்தார்கள்? எதையும் புரிந்து கொள்ள முடியாது. இங்கும் ஒவ்வொரு விசயத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் ஆடம்பரம் தேவை, அதைப் பார்த்தே வருவார்கள். இப்பொழுது அங்கு புரிய வைக்கக்

கூடியவர்கள் மிகவும் நன்றாக இருக்க வேண்டும். இவர் ஜெகதம்பா, அனைவரின் மன ஆசைகளையும் பூர்த்தி செய்யக் கூடியவர் என்று குழந்தைகள் தான் புரிய வைப்பார்கள். மரத்தின் அடியில் காண்பிக்கின்றனர் - காமதேனு அமர்ந்திருக்கின்றார். ஆக அவரை சந்திப்பதற்காகவும் வருவார்கள். ஜெகத்பிதா இருக்கின்றாரெனில் ஜெகத்திற்கு தாயும் இருப்பார். ஆனால் ஜெகதம்பா என்று இவரைக் கூறுகின்றோம். ஏனெனில் கலசம் தாய்மார் களிடத்தில் கொடுக்கப்படுகின்றது. முக்கியமானவர் ஜெகதம்பா என்று கூறப்படுகின்றார். பிறகு அவரது சேனைகள்.

குழந்தைகள் நீங்கள் கண்காட்சி அமைக்கின்றீர்களெனில் அதில் புரிய வைப்பதற்காக நல்ல நல்ல குழந்தைகள் தேவை. தந்தையின் அறிமுகம் கொடுப்பது தான் முக்கியமானது என்று தந்தை புரிய வைத்திருக்கின்றார். இரண்டு தந்தைகள் உள்ளனர் என்று முதன் முதலில் புரிய வையுங்கள். ஒன்று உங்களது லௌகீக தந்தை, மற்றொன்று பரலௌகீக தந்தை. லௌகீக தந்தையிடமிருந்து பல பிறவிகாளக எல்லைக்குட்பட்ட ஆஸ்தியை அடைந்து வந்தீர்கள். இப்பொழுது எல்லையற்ற ஆஸ்தி அடையுங்கள். அதிக காலம் சென்று விட்டது, சிறிது காலம் தான் இருக்கின்றது ...... விகர்மங்களின் சுமைகள் தலையில் அதிகமாக இருக்கின்றது. யோகாவின் மூலமாகவே விகர்மங் களை அழிக்க முடியும். சித்தி வீடு போன்று கிடையாது. ஏதாவது கணக்கு வழக்குகள் இருக்கின்ற தால், தான் அதனை அனுபவிக்க வேண்டியிருக்கின்றது அல்லவா? எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியிருக்கின்றது! ஒரு வேளை தாமதமாக வந்தால் எந்த அளவிற்கு விகர்மங்களை விநாசம் செய்ய முடியும்? கடினமல்லவா! இவ்வாறு நீங்கள் பறை சாற்றி விடுங்கள், பிறகு யாரும் புகார் கூறிவிடக் கூடாது. நாங்கள் பறைசாற்றினோம், செய்தித்தாட்களில் எழுதினோம் என்று நீங்கள் கூற முடியும். எவ்வளவு முடியுமோ அழைப்பிதழ் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியை அடைவதற்கான முயற்சி செய்யுங்கள். மிக அதிகமாக அழைப்பிதழ்களைக் கொடுங்கள். அனைத்தையும் விட அதிகமான சேவை டெல்லி யில் செய்ய முடியும். டெல்லி என்பது பாரததேசத்தின் சிம்மாசனமாகும். அங்கு அனைத்து செய்தித்தாட்களின் ஏஜென்ட்களும் இருக்கின்றனர். செய்தித்தாட்களையும் பயன்படுத்த வேண்டும். லௌகீக தந்தையிடமிருந்து பல பிறவிகளாக ஆஸ்தியடைந்து வந்தீர்கள், இப்பொழுது பரலௌகீக தந்தையிடமிருந்து ஆஸ்தியடையுங்கள். எந்த வைகுண்டத்தை நினைவு செய்கின்றீர்களோ அதற்கான ஆஸ்தியை தந்தையிடத்தில் வந்து எடுத்துக் கொள்ளுங்கள். அனைத்து செய்தித் தாட்களிலும் போடுங்கள் - சிவபாபா வின் பிறப்பிடம் பாரதமாகும். அனைவரையும் முன்னேற்றக் கூடியவர் ஒரே ஒரு தந்தையே! ஆக அனைத்தையும் விட மிகப் பெரிய தீர்த்தமாக பரம்பிதா பரமாத்மா பதீத பாவன் ஆகி விட்டாரல்லவா! ஆனால் இது யாருக்கும் தெரியவில்லை. கிறிஸ்து, இப்ராஹிம், புத்தர் போன்றவர்கள் அனைவரும் மறுபிறப்பு எடுத்து எடுத்து இப்பொழுது கடைசிப் பிறப்பில் இருக்கின்றனர். கிறிஸ்து ஏதோ ஒரு பிறப்பில் இங்கு தான் இருக்கின்றார் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். கிறிஸ்தவர்களும் மரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இல்லை யெனில் இவ்வளவு ஆத்மாக்கள் எங்கிருந்து வருவார்கள்! கண்டிப்பாக செக்சன் (பிரிவுகள்) உள்ளது, அங்கிருந்து வருகின்றனர். சரித்திரமானது மீண்டும் கண்டிப்பாக நடைபெறும். இந்த மரம்

மிகவும் நல்ல பொருளாகும், ஆனால் இதன் மதிப்பானது குழந்தைகளிடத்தில் வரிசைக்கிரமமாக இருக்கின்றது.

குழந்தைகள் மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்காக கண்காட்சி போன்றவைகளை செய்கின்றீர்கள். இதில் எந்த கலைக்கான (ஹழ்ற்), வெளிப்பாடும் (ள்ட்ர்ஜ்) செய்யக் கூடாது. கலைக் கூடத்தில் (ஹழ்ற் ஞ்ஹப்ஹழ்ஹ்) வீண் சித்திரங்களை வைக்கின்றனர். இது கலை என்று நினைக்கின்றனர். தேவதைகளின் சிறிய இடுப்பு போன்ற சித்திரங்களை செதுக்குகின்றனர். அங்கு தேவதைகள் இயற்கையான அழகுடன் இருப்பார்கள். இந்த நேரத்தில் 5 தத்துவங்களும் தமோ பிரதானமாக இருக்கின்றது. சத்யுகத்தில் 5 தத்துவங்களும் சதோ பிரதானமாக இருக்கும். வெள்ளையான கிருஷ்ணன் மற்றும் நீலநிற கிருஷ்ணன் என்றும் பாடப் பட்டிருக்கின்றது. அங்கு சரீரத்தைப் பராமரிக்க வேண்டியிருக்காது. இங்கு பாருங்கள் - எவ்வளவு பராமரிக்க வேண்டியிருக்கின்றது. அங்கு வயோதிகர்களாக இருந்தாலும் பற்கள் போன்றவைகள் அனைத்தும் வலுவாக இருக்கும். பற்கள் உடைந்து விட்டால் உருவமே மாறிப்போய்விடும். அங்கு முழுமையாக முதல் தரமான 16 கலைகள் நிறைந்தவர்களாக இருப்பார்கள். முடம், நொண்டி இருக்க மாட்டார்கள். இங்கு பாருங்கள் - எப்படியெல்லாம் முடம், நொண்டியாக பிறக்கின்றனர். ஆக நீங்கள் அப்படிப்பட்ட பரீஸ்தானுக்கு (சொர்க்கத்திற்கு) எஜமானர்களாக ஆகிக் கொண்டி ருக்கின்றீர்கள். ஒரே ஒரு வழிப்போக்கன் வந்து பரிஸ்தானுக்கு அழைத்துச் செல்கின்றார். வழிப்போக்கர்களாகிய நீங்கள் இங்கு நடிப்பை நடித்து நடித்து பதீதமாகி விடுகின்றீர்கள். ஆத்மா கருப்பாகி விடுகின்றது. தந்தை எப்பொழுதும் தூய்மை யானவராக இருக்கின்றார். அவரிடத்தில் ஒருபொழுதும் கறை படிவதில்லை. நான் உண்மையான தங்கமாக இருக்கின்றேன், ஆகையால் தான் என்னை அழைக்கின்றீர்கள். சதா பாவனமாக இருக்கக் கூடியவரையே - பாபா, வாருங்கள், எங்களையும் உங்களுக்குச் சமமாக ஆக்குங்கள் என்று அழைக் கின்றீர்கள். நீங்கள் சதா பாவனமானவர்களாக ஆக மாட்டீர்கள். மற்றபடி சதோ பிரதானத்தில் அனைவரும் வந்தே ஆக வேண்டும். ஆனால் அதிலும் வரிசைக்கிரமம் இருக்கின்றது. நாடகத்தில் நடிகர்கள் விதவிதமாக இருப்பார்களல்லவா! சிலர் கதாநாயகன், கதாநாயகிகளாக இருப்பர். அவர்களுக்கு அதிகமான பைசா கிடைக்கும். இப்பொழுது அரசாங்கம் அனைவரது பணங்களையும் அபகரித்துக் கொண்டே இருக்கின்றது. யாருக்கு அதிஷ்டம் இருக்கின்றதோ, சிலர் ராஜா ஆகின்றனர்...... என்று கூறப்பட்டிருக்கின்றது. ஏனெனில், சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வதற்காக செல்வந்தர் வந்திருக்கின்றார். யார் தந்தையினுடைய உதவியாளர்களாக இருக்கின்றார்களோ அவர்களுடையது மட்டுமே பாதுகாப்பாக இருக்கும். உங்களுக்கு அங்கு அதிகமான செல்வங்கள் இருக்கும். அதிகமான தங்கம், வைரங்களின் ஆபரணங்கள் இருக்கும். ஆனால் உங்களுக்கு அதைப் பற்றிய கவலையும் இருக்காது. உங்களை யாரும் கொள்ளையடிக்க மாட்டார்கள். வைரம், தங்கம் போன்ற களஞ்சியங்கள் அனைத்தும் உங்களுக்கு புதிது புதிதாகக் கொடுக்கும். கற்களைப் போன்ற வைரங்கள் கிடைக்கும். அனைத்தும் உங்களுக்கு கிடைத்து விடும். செங்கற்களால் மாளிகை கட்டுவது போன்று அங்கு தங்கத்தினால் மாளிகையைக் கட்டிக் கொண்டே இருப்பீர்கள். செல்வந்த பிரஜையும் தங்கமாளிகையைக் கட்டுவார். முழு வள்ளலாக இருக்கக் கூடியவர்களும் தங்கத் தினால் கட்டுவார்கள். பாபா அனைத்து

விசயங்களையும் கூறிக் கொண்டே இருக்கின்றார். நீங்கள் பசியால் இறந்து விடுங்கள் என்றும் கூறுவதில்லை. குழந்தைகள் போன்றவர்களையும் கவனிக்க வேண்டும். படைப்பவரின் பொறுப்பு கவனிப்பதாகும், துக்கமானவர்களாக ஆக்கக் கூடாது. பட்டினியாக ஆக்கக் கூடாது. கருணையுள்ளம் உடையவர்களாக ஆக வேண்டும். மனிதர்கள் எவ்வளவு துக்கமானவர்களாக இருக்கின்றனர்! அதிக கஷ்டங்கள் ஏற்படும் பொழுது அதிகமான துக்கமும் ஏற்படும் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். ஐயோ, ஐயோ! என்று கூறுவார்கள், பிறகு வெற்றி ஏற்படும். அனைத்து ஆத்மாக்களுக்கும் சுகம் கிடைத்து விடும். தந்தை துக்கத்தைப் போக்கி சுகம் கொடுக்கக் கூடியவராக இருக்கின்றார். சுகம் இரண்டாக இருக்கின்றது - ஒன்று சாந்திதாமத்தில் இருப்பது மற்றும் மற்றொன்று சுகதாமத்தில் இருப்பதாகும். சுகதாமத்தில் தூய்மை, சுகம், சாந்தி அனைத்தும் இருக்கின்றது. தந்தை கூறுகின்றார் - நான் ஒவ்வொரு கல்பத் திலும் வருகின்றேன். மனிதர்கள் எப்பொழுது மிகவும் துக்கமானவர்களாக ஆகிவிடுகின்றார்களோ என்னுடைய பாகமும் அந்த நேரத்திற்கானதாகும். ஆகையால் தான் எனது பெயரே துக்கத்தை நீக்கி சுகம் கொடுக்கக்கூடியவர், அனைவருக்கும் அமைதி கொடுக்கும் வள்ளல், சுக வள்ளல் என்பதாகும்.

நாம் பாபாவின் கூடவே அனைவருக்கும் அமைதியை தானம் செய்கின்றோம் என்பதை நீங்கள் அறிந்திருக் கின்றீர்கள். எந்த அளவிற்கு நினைவில் இருக்கின்றீர்களோ அந்த அளவிற்கு மற்றவர்களுக்கும் தானம் கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள். பிறகு சுகத்திற்காக ஞானம் கொடுக்கின்றீர்கள். ஆக குழந்தைகள் தாய், தந்தையை வெளிப்படுத்த வேண்டும். எந்த அளவிற்கு வெளிப்படுத்துகின்றோமோ, சுகம், சாந்திக்கான வழியை அதிகமானவர்களுக்கு காண்பிக் கின்றோமோ அதற்கு பரிசு கிடைக்கும். பாபா உங்களுக்கு புது உலகிற்கான அனைத்து புதுப் புது விசயங்களையும் கூறுகின்றார். பழைய உலகம் மற்றும் புது உலகம் இரண்டிற்கான சாட்சாத் காரத்தை ஏற்படுத்துகின்றார். மேலும் அதிகமான சாட்சாத்காரம் உங்களுக்கு ஏற்படுத்துவார். ஆனால் அது பாபாவினுடைய பக்காவான, உண்மையான குழந்தைகளுக்கு மட்டுமே. உண்மையான உள்ளத்தினரிடமே எஜமான் திருப்தி அடைகின்றார். நீங்கள் அதிகம் பார்ப்பீர்கள், ஆரம்பத்தில் காண்பித்தது போன்று கடைசியிலும் காண்பிப்பார். எவ்வளவு நிகழ்ச்சிகள் வந்தன, சாட்சாத்கார் செய்வித்தார். எவ்வளவு அலங்காரம், கிரீடம் போன்ற வைகளை அணிவித்தார், பிறகு மீண்டும் வித விதமான முறையில் காண்பிப்பார். மிருகத்திற்கு மரணம், வேட்டைக்காரனுக்கோ சந்தோஷம். பிரிவினையின் அந்தப்பொழுதும் அதிகமான மரணம் ஏற்பட்டதல்லவா! உங்களுக்கோ எந்தக் கவலையும் இல்லை. நீங்களோ உயிருடன் இருந்து கொண்டே இறந்து விட்டீர்கள். ஆக பாபா கூறுகின்றார் - குழந்தைகளே! முழுமையாக முயற்சி செய்யுங்கள். உழைப்பு செய்யுங்கள், நாம் ஆத்மாக்களாக இருக்கின்றோம். ஒருவர் மற்றவருடன் ஆன்மீக விசயங்களைப் பேசிக் கொண்டேயிருங்கள். உலகீய தேகாபிமானத்திற்கான விசயங்களை அழித்து விடுங்கள். ஆச்சரியத்துடன் ஓடிப் போனவர்கள் இவையனைத்தையும் பார்க்க மாட்டார்கள். கடந்ததையும் நீங்கள் பார்த்தீர்கள், மேலும் புதிதாக வருபவர்களையும் நீங்கள் பார்ப்பீர்கள். முயற்சி செய்யுங்கள். இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு தந்தை அதிகமான அன்பு செலுத்துகின்றார். அன்பான குழந்தைகளுக்கு அதிகமான அன்பு கிடைக்கின்றது. நன்றாக சேவை செய்பவர்களுக்கு அன்பும் கிடைக்கும்,

பதவியும் கிடைக்கும். ஆத்மாக்களாகிய நமக்கு பரம்பிதா பரமாத்மா கல்வி கொடுத்துக் கொண்டு இருக்கின்றார், சொர்க்கத்திற்கு வாரிசாக ஆக்குகின்றார் என்பதை மறந்து விடாதீர்கள். தெய்வீக குணமுடையவர் களாக ஆக வேண்டும். முன்பு அனைவரிடத்திலும் அசுர குணம் இருந்தது. இப்பொழுது பாபா எதிரில் அமர்ந்திருக்கின்றார். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. அவரிடத்தில் அன்பு இருக்கின்றது. தரகரிடத்தில் அல்ல. இடையில் வரக்கூடியவர் தரகர். அவரிடமிருந்து உங்களுக்கு பலன் கிடைக்கின்றது. ஆக தந்தையை நினைவு செய்ய வேண்டும். தேகாபிமானத்தை விட்டுக் கொண்டே செல்லுங்கள். எனக்கு ஒரு பாபாவைத் தவிர வேறு எந்த தேகதாரிகளின் நினைவும் வரக் கூடாது. பாபா இந்த பழைய செருப்பில் வந்திருக்கின்றார். நான் இதனை கடனாக எடுத்திருக்கின்றேன். கல்பத்திற்கு முன்பும் இந்த வார்த்தை கூறியிருப்பார். இப்பொழுதும் கூறிக் கொண்டிருக்கின்றார். இன்றைய நாளில் தான் உங்களுக்கு புரிய வைத்திருந்தேன், மீண்டும் புரிய வைத்துக் கொண்டிருக்கின்றேன். எவ்வளவு நல்ல விசால புத்தி தேவை. லெட்சுமி நாராயணன் நம்பர் ஒன் ஆனார்கள். கண்டிப்பாக நல்ல பிராப்திகளை உருவாக்கியிருக்க வேண்டும். இது இறை தந்தையின் விடுதலைப்படைகள் ஆகும். முழு உலகிற்கும் முக்தி, ஜீவன்முக்தி என்ற விடுதலையைக் கொடுக்கக் கூடியவர்கள். அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் இராமர். முழு உலகமும் கதியில் சென்றே ஆக வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிய செல்லக் குழந்தைகளுக்கு, தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தந்தையின் கூடவே முழு உலகிற்கும் அமைதிக்கான தானம் செய்ய வேண்டும். தந்தைக்குச் சமமாக துக்கத்தை நீக்கி சுகம் கொடுக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும்.

2) ஒரு தந்தையிடத்தில் முழு அன்பு வைக்க வேண்டும். தங்களுக்குள் தேகாபிமானத்திற்கான விசயங்களை பேசிக் கொள்ளக் கூடாது. ஆன்மீக விசயங்களையே பேசிக் கொள்ள வேண்டும்.

வரதானம் : தைரியமான சங்கல்பம் (எண்ணத்தின்) மூலமாக மாயையை தைரியமற்றதாக ஆக்கி விடக் கூடிய தைரியமுடைய ஆத்மா ஆவீர்களாக.

எந்த குழந்தைகள் ஒரு பலம், ஒரு நம்பிக்கையில் இருக்கிறார்களோ, நாங்கள் வெற்றியாளர் ஆகவே வேண்டும் என்று தைரியத்தின் சங்கல்பம் செய்கிறார்களோ - தைரியமுடைய குழந்தை களுக்கு தந்தையின் உதவி எப்பொழுதும் அனுபவம் ஆகிறது. தைரியத்தின் காரணமாக உதவியின் பாத்திரம் ஆகி விடுகிறார்கள். தைரியத்தின் சங்கல்பத்திற்கு முன்னால் மாயை தைரியமிழந்ததாக ஆகி விடுகிறது. யார் ஆகுமோ இல்லையோ தெரியாது, என்னால் செய்ய முடியுமோ இல்லையோ தெரியாது என்று பலவீனமான சங்கல்பம் செய்கிறார்களோ, அப்பேர்ப் பட்ட எண்ணங்கள் தான் மாயைக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே எப்பொழுதுமே ஊக்கம் உற்சாகத்தில்

நிறைந்த தைரியத்தின் சங்கல்பம் செய்யுங்கள். அப்பொழுது தான் தைரியசாலி ஆத்மா என்று கூறப்படுவீர்கள்.

சுலோகன்: பணிவுள்ளம் என்ற இருக்கையில் அமர்ந்து, பொறுப்பு என்ற கிரீடத்தை தரித்திருப்பதே, சிறப்பான தன்மை ஆகும்.